



# jamaat ul sahih al islam – tamil nadu



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் பண்புகள்

(பாகம் -7)

*ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)*

***05 June 2020***

**(13 SHAWWAL 1441 AH)**

*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No:- 917502272774***

# THE ATTRIBUTES OF ALLAH (PART – 7)

## அல்லாஹ்வின் பண்புகள் (பாகம் -7)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.'.பாத்திஹா ஓதியபிறகு ஹஸ்ரத் கலீ.'.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் ஜும்ஆ பேருரையியை நிகழ்த்தினார்கள்.

சர்வ வல்லமையுள்ள, எந்த எவ்வித மாற்றத்திற்கும் உட்படாத நிரந்தர பண்புகளைக் கொண்ட ஒரு இறைவன், அனைத்தையும் படைத்து பரிபாலனம் செய்பவனுமாகிய ஓர் படைப்பாளனின் உதவி உங்களுக்கு உள்ளது என்பதை நீங்கள் உறுதியாக அறிந்து கொள்வது அவசியம். அவன் மிகத் தொலைவில் உள்ளவனாக இருந்த போதிலும் மிக அருகிலேயே இருக்கின்றான். அவன் மிக அருகில் உள்ளவனாக இருந்த போதிலும் அவன் மிக தொலைவிலேயே இருக்கின்றான் ஆனால் அவனது அடையாளங்கள் பலவாகும். இறைவன் எந்த மாற்றத்திற்கும் உள்ளாகாதவனாக இருக்கின்றான். ஏனெனில் அவன் நித்தியமாக மாறாத இயல்புகளுக்கு உடையவனாக நிலைத்து நிற்கிறான். அவனுடைய பண்புகளில் அவன் முழுமையானவன். ஆகவே அவனைவிட முன்னுரிமை இந்த உலகத்திற்கோ, அதன் வளங்களுக்கோ அல்லது உங்கள் அன்புக்குரியவர்களுக்கோ நீங்கள் வழங்காதீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவனை நேசித்துக் கொள்ளுங்கள். அவ்வாறேயானால் பரலோகத்தில் அவனுடைய சமூகத்தில் பதிவு செய்யப்பட்டவர்களில் நீங்கள் இருப்பீர்கள்.

சர்வ வல்லமையுள்ள இறைவன் எப்போதும் தனது கருணையை பொழிந்தவாறு இருக்கின்றான். நீங்கள் அதை அனுபவிக்க விரும்பினால் எதுவொன்றுமே உங்களை அவனிடமிருந்து பிரிக்கமுடியாது என்பதையும், உங்கள் இன்பமும் ஆசைகளும் அவனுடன் முழுமையாக இணைத்திருப்பதையும், நீங்கள் முழு மனதுடன் அவனுக்கு அடி பணிவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், வெற்றிகரமாக இருந்தாலும், தோல்வியுற்றாலும் சரி இறைவன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக எப்போதும் அவனது சிம்மாசனத்தின் வாசலுக்கு முன்பாக தலைவணங்குங்கள். பூமியில் அவனுடைய ஏகதுவத்தை நிலைநாட்ட உங்கள் அனைத்து ஆற்றலையும் பயன்படுத்துங்கள். அவனுடைய படைப்பினங்களிடம் கருணையும் இரக்கமும் காட்டுங்கள். அவர்களுக்கு தீங்கு விளைவிக்காதீர்கள், அது உங்கள் நாக்கு, கைகள் அல்லது வேறு வழிகளாக இருந்தாலும் அவர்களின் நல்வாழ்வை (அவர்களின் அவல நிலையை மேம்படுத்தல்) மேம்பபடுத்துவதற்காக செயல்படுங்கள் உங்களுக்கு அவர் அடிப்பணிந்தவராகவோ அல்லது உங்கள் வேலைகாராகவோ இருந்தாலும் யாரிடமும் தற்பெருமையுடன் நடந்து

கொள்ளாதீர்கள். நீங்கள் அவமதிக்கப்பட்டாலும் யாரையும் சபிக்காதீர்கள். பரந்த மனப்பான்மையும் கருணையும் கொண்டவராக இருங்கள். உங்கள் சகமனிதர்களிடம் உண்மையான அனுதாபத்தைக் கொண்டிருங்கள். அப்போதுதான் நீங்கள் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுவீர்கள். தோற்றத்தில் மட்டுமே தூய்மையானவர்கள் பலர் உள்ளனர். ஆனால் அவர்களின் அந்தரங்கம் பார்த்தால் பசிகொண்ட ஓநாய்களை போல் இருப்பார்கள். வெளிப்பார்வைக்கு சிலர் தூய்மையான தன்மையைக் கொண்டிருப்பதாகத் தெரியும், ஆனால் அவர்களின் உட்புறம் பார்த்தால் உண்மையில் பாம்பாக இருப்பார்கள். உங்கள் சொல்லும் செயலும் உங்கள் இதயத்திற்கு இணங்கியவாறு அமைந்தால் மட்டுமே இறைவனால் அங்கீகரிக்கப்படுவீர்கள். நீங்கள் உயர்பதவியை கொண்டிருந்தால் உங்களுக்கு கீழ் இருந்து பணியாற்றுபவர்களிடம் பணிவுடன் நடந்துக் கொள்ளுங்கள். நீங்கள் அறிவாளிகளாக இருந்தால் அதைப் பற்றி தற்பெருமை கொள்ளாதீர்கள். மாறாக அறவீனர்களுக்கு உங்கள் நல்ல அலோசனைகளை கொண்டு அறிவூட்டுங்கள். அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். நீங்கள் பணம் படைத்தவர்களாக இருந்தால் அதைப்பற்றி பெருமை கொள்ளாதீர்கள் மாறாக ஏழை எளியவர்களுக்கு சேவை செய்து உங்கள் உதவிகரங்களை நீட்டுங்கள். அவர்கள் முன்பாக உங்கள் தற்பெருமையை வெளிப்படுத்ததீர்கள். அழிவுக்கு வழிவகுக்கும் பாதைகளிலிருந்து விலகி இருங்கள் இறைவனுக்கு அஞ்சியவாறு உங்கள் வாழ்கையை அமைத்துக் கொள்ளுங்கள். நீதியை பின்பற்றுங்கள். படைப்பினங்களை வணங்காதீர்கள். தர்காகளில் செல்லாதீர்கள். எல்லாவகையான பிதுஅத்துகளிலிருந்தும் விலகி இருங்கள். இவையாவும் இஸ்லாத்தின் போதனைகள் அல்ல என்பதை உணருங்கள். உலகின் மீது மிகுந்த பற்று கொண்டுவீடாதீர்கள். பௌதீகமான அனைத்தையும் உங்கள் இதயத்திலிருந்து அழித்து விடுங்கள். இறைவனுக்காக வாழுங்கள். உங்களை முழுமையாக அவனிடம் அர்பணித்து கொள்ளுங்கள். இறைவனுக்கு மட்டுமே சேவை புரியுங்கள். உங்கள் முழுவாழ்க்கையையும் அவனுடைய தொண்டுக்காக சமர்பித்துக் கொள்ளுங்கள். இறைவனின் அன்பிற்காக அனைத்து தூய்மையற்ற மற்றும் தீமைகளையும் வெறுத்து ஒதுக்குங்கள் ஏனெனில் உங்கள் இறைவன் மிக தூய்மையானவனாக இருக்கின்றான்.

நீங்கள் பகலில் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருந்ததாக ஒவ்வொரு இரவும் சாட்சியளிக்கட்டும் ஒவ்வொரு இரவும் நீங்கள் இறைவனுக்கு பயந்து கழிந்ததாக ஒவ்வொரு பகலும் சாட்சியளிக்கட்டும். இவ்வுலகத்தின் சாபத்தைக் கண்டு அஞ்சிவிடாதீர்கள். ஏனென்றால் அதற்குப் பகலை இரவாக்க முடியாது. மாறாக வானத்திலிருந்து இறங்கும் இறைவனின் சாபத்திற்கு அஞ்சுங்கள். அந்த சாபத்திற்கு யார் ஆளாகின்றாரோ அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் இழப்பே நேரிடும்.

அனைத்து புகழும் இறைவனுக்கே உரியது. அவன் படைப்பாளனாக இருக்கின்றான். அவனுடைய படைப்பினங்களின் விதியை நிர்ணயிப்பதும், ஆட்சி செய்வதும், அனைத்தும் தீர்மானிப்பதும் அவன்தான். எது ஒன்றுடனும் ஒப்பிடமுடியாத அரசனாக அவன் திகழ்கின்றான். எல்லாம் காண்பவனும், அனைத்தும் கேட்பவனும் அவனே ஆவான். அவனுடைய சாம்ராஜ்ஜியத்தில் எந்த

அமைச்சரும் இல்லை. அவன் மட்டுமே அந்த சாம்ராஜ்ஜியத்தின் உரிமையாளர். பெரியவரோ அல்லது சிறியவரோ, யாரும் அவனது கட்டுப்பாட்டிலிருந்து தப்பி செல்ல முடியாது. அவன் முழுமை பெற்றவனாக இருக்கின்றான். அவன் எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கின்றான். அவனைப் போன்ற யாரும் இல்லை. அவன் பரிபூர்ணனாக இருக்கின்றான். அவன் எல்லாம் அறிந்தவன், இதிலிருந்து உங்கள் இதயங்கள் மறைத்து வைக்கும் எதுவொன்றும் தப்பிக்காது. மிக நுட்பமான தகவல்களைக் கூட அறிந்தவானாக படைத்தன் இருக்கும் போது நீங்கள் மறைத்து வைப்பதை அவன் அறியமாட்டானா? அவன் அனைத்திலும் அறிவார்ந்தவன் விஞ்ஞானவிஷயங்களின் கொள்கையையும், அவற்றின் இலக்கையும் அவன் அறிக்கின்றான். நீங்கள் சத்தமாக பேசினாலும் மெதுவாக பேசினாலும், எதுவாக இருந்தாலும் அதனை எந்த வித்தியாசமும் இல்லாத அளவிற்கு அவன் கேட்பவனாக இருக்கின்றான். அவன் தனது கிருபையை பொழிந்து, தனது படைப்பினங்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்கின்றான். அவன் தானாகவே நிலை நின்று எல்லா சூழ்நிலைகளிலும் படைப்பினங்களின் பொறுப்பை (உத்தரவாதத்தை) ஏற்றுக் கொள்பவனாக இருக்கின்றான்.

அவன் அவர்களின் வாழ்க்கை நிலை நிற்றலுக்கேற்ப வழங்கி வரும் நன்கொடையாளன். அவர்களுக்கு மரணத்தை கொடுத்தபின் அவர்களை மீண்டும் உயிர்ப்பிக்கும் சக்திவாய்ந்தவன். நல்ல அல்லது தீய செயல்களுடன் மனிதர்கள் அவனுக்கு முன் தோன்றும் நாளில் அதற்கேற்ப வெகுமதி அல்லது தண்டனை வழங்குபவன். தனது படைப்பினங்களை உருவாக்குவதற்கு முன்பே அவனது தாராள மனப்பான்மையைக் காட்டிய அவனுடைய தெய்வீகத்தை நமக்கு மகிமைபடுத்துவோம். அவனை மறுப்பவருக்கும், அவனை ஏற்றுக்கொள்பவருக்கும் வாழ்வாதாரத்தை அவன் வழங்குகின்றான். அந்த பொறுப்பு அவனுடையதாக உள்ளது. அவன் ஒவ்வொரு மனிதர்களுக்கும் தனது பரிசு / உதவிகளை வழங்கி அவர்களை ஆதரிக்கின்றான். மேலும் இந்த உலகின் நிலை நிற்பு மற்றும் அதன் நிரந்தரத்தை தனது ஆற்றலின் மூலம் உறுதிப்படுத்தி, அதை பாதுகாக்கின்றான். அவன் தனது ஞானத்தால் பூமியிலும், தனது சக்தியால் வானத்திலும் தன்னை வெளிப்படுத்துகிறான். ஆகவே நான் சாட்சியமளிக்கிறேன். **“இறை ஆணைக்கு உட்பட்ட ஒரு ஊழியன் என்ற நிலையில் நான் இறைவனின் முடிவுகளுக்கும் தீர்ப்புகளுக்கும் அடிபணிந்துக்கொள்கிறேன். அல்லாஹ்வைத் தவிர வேறு ஒரு இறைவன் இல்லை. அவன் மட்டுமே இறைவன், அவனுக்கு எந்த கூட்டாளிகளுமில்லை” (என்று நான் சாட்சியமளிக்கிறேன்.)**

மே மாதம் 30- ஆம் தேதியன்று இந்தியாவில் தமிழ் நாடு ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஒரு முஜ்தாபா, இறைபண்புகள் அவனது மகிமை மற்றும் புகழ் குறித்து அல்லாஹ்விடமிருந்து ஒரு புத்துணர்ச்சியூட்டும் செய்தியைப் பெற்றிருக்கிறார். அந்தச் செய்தியானது எனது பேருரைகளுடன் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ளது. இது சலாத் உல் சுஹரின் போது, தந்தை மற்றும் மகள் (முக்கராம் சலீம் சாஹிப் மற்றும் அவரது சிறிய மகள் ஜனுல்மிஸ்பா

சாஹிபா) சுஹர் தொழுகையில் ஏற்பட்டிருந்தனர். தொழுகையின் போது தனது மகள் ஏதோ முனங்கிக் கொண்டிருப்பதை சலீம் சாஹிப் மிக தெளிவாக கேட்டார்.

பிரார்த்தனையின் முடிவில், ஏன் நீ இவ்வாறு செய்தாய் என்று தனது மகளிடம் கேட்டார், ஏனென்றால் பிரார்த்தனையில் படைப்பாளனுக்கு முன்னால் முனங்குவது வெறுக்க தக்கது. எனவே அவருடைய மகள், **"தன் நாவில் இவ்வார்த்தைகள் தானாகவே வந்துவிடன என்றும் அவற்றில் தனக்கு எந்த கட்ப்பாடும் இல்லை என்றும் பதிலளித்தாள்."** எனவே அவளுடைய தந்தை அவள் நாவிலிருந்து வந்த அந்த வார்த்தைகளை எழுதும் படி கேட்டார்.

அச்செய்தி பின்வருமாறு

பிஸ்மில்லாஹி ரஹ்மானி ரஹீம்

**லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ் (2 முறை)**

**(அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதரவார். (2 முறை))**

**"அல்லாஹ் மிகவும் தூய்மையானவன்.**

**அல்லாஹ் எங்கும் இருக்கின்றான்.**

**சுபுஹான் அல்லாஹ் (அல்லாஹ்வின் தூய்மையை நான் புகழ்கிறேன்.) அல்லாஹ் தூய்மையானவன்.**

**அல்ஹ்மதுலில்லாஹ் (எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே உரியது) அல்லாஹ் மிக பெரியவன்.**

**அல்லாஹ் எங்கும் இருக்கின்றான். அல்லாஹ் நம்மை மற்றும் எல்லாவற்றையும் படைத்தான். அல்லாஹ்வுக்கு நன்றி.**

**அல்ஹம்துலில்லாஹ்**

**லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மது (ஸல்) ரசூலுல்லாஹ்.**

இது நிச்சயமாக ஒரு நல்ல ஆன்மீக அனுபவம். அல்லாஹ் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் குழந்தைகள் மற்றும் பெரியவர்களை ஆசீர்வதிப்பனாக, அதனால் ஒவ்வொருவரும் அவனது பண்புகளை நினைவுகோருதல், அவனை மகிமைப்படுத்துதல் மற்றும் அவனை புகழ்வதன் மூலம் அவனுடன் இணைந்திருக்க முடியும். மரியாதை, அன்பு மற்றும் கீழ்படிதலுடன் அவனை அணுகும் நம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் உதவிபுரிகிறான்.

என் சகோதர சகோதரிகளே, நீங்கள் நன்கு தெரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீதமான நேர்மையான நம்பிக்கை உங்கள் இரட்சிப்பிற்கு

வழிவகுக்கும். அதே நேரத்தில் பாசாங்குத்தனமும் துரோகமும் உங்களை தன்டனை மற்றும் அழிவின் பக்கம் அழைத்து செல்லும். பாசாங்குதனத்தால் நீங்கள் உங்களை காப்பாற்ற முடியாது. ஏனென்றால் உங்களின் இறைவன் உங்கள் இதயத்தில் குடிகொள்ளும் மிக நுட்பமான ரகசியங்களைக் கூட நன்கு அறிபவனாக இருக்கின்றான். நீங்கள் அவனை ஏமாற்றலாம் என்று நினைக்கிறீர்களா? எனவே நீங்கள் சுத்தமான, தூய்மையான மற்றும் நேர்மையானவராக இருங்கள். உங்களில் ஏதேனும் இருள் இருந்தால் அது உங்கள் ஒளியை அனைத்தும் மறைத்துவிடும். மேலும் ஆணவம், கர்வம் அல்லது அலட்சியம் இருந்தால் இறைவன் உங்களை ஏற்றுக்கொள்ள மாட்டான். இன்று நான் இதனை நிறுத்துகிறேன். அடுத்த வாரமும் அல்லாஹ்வின் பண்புகள் என்னும் இதே விஷயத்தில் தொடர்ந்து பேச அல்லாஹ் எனக்கு தவ்ஃபீக் வழங்குவதற்காக நான் பிரார்த்திக்கிறேன்.

அல்லாஹ் தனது பண்புகளின் யதார்த்தத்தை உங்களுக்கு ஆழமாக புரியவைப்பானாக! மேலும் உங்கள் வாழ்கையின் ஒவ்வொரு தருணத்திலும் அவனது பண்புகளால் அவனை புகழ்வதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக அவன் உங்களுகு வழங்கிய அனைத்து உதவிகளுக்கும் அவனுக்கு நன்றி சொல்வதற்கும் நீங்கள் மறந்து விடாதீர்கள். இறை அருளுக்கும் மற்றும் உதவிகளுக்கு மட்டுமல்ல, நீங்கள் அவனுடன் நெருங்கி கொள்ளும் போது உங்களுக்கு சந்திக்க நேரும் சோதனைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுங்கள். இன்ஷா அல்லாஹ் நீங்கள் திகர் செயவதன் மூலம், அமைதி, சாந்தி பாதுகாப்பு, குணமடைதல் மற்றும் கருணை ஆகியவற்றைப் பெறுவீர்கள். ஆமீன்.

**Translated by:**

**Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**